Export of Handloom goods

* 565 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the quantity of handloom good exported from the Madras Harbons during 1972–73 and its value?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுமார் ரூ. 639.30 இலட்சம் மதிப்புள்ள சுமார் 9.2 இலட்சம் கிலோ கிராம் எடையும், 134.54 இலட்சம் மீட்டர் அளவுள்ள கைத்தறி துணிகள், 1972-73-ம் ஆண்டு, சென்னை துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதியாயின.

திரு. என். கே. பழனிசாமி: சார், வருஷா வருஷம் வெளிநாட்டிற்கு அனுப்பும் கைத்தறித் துணிகள் குறைவதற்கான காரணம் என்ன? அதை வெளிநாட்டிற்கு அனுப்பும் முறையிலே சர்க்கார் அதற்கு ஊக்குவிக்கும் முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, உலகச் சந்தையில் போட்டி போடும் ஒரு வாய்ப்பை இழக்கும் நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்பதுதான் ஒரே பரிகாரம். இதன் மூலம் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி அத்தனையும் மத்திய அரசுக்குப் போகிறது. ஆகவே, மத்திய அரசு கைத்தறித் துணிகளை ஏராளமாக உலகச் சந்தையில் விற்க தனிச் சலுகைகள் அளித்தாலொழிய இதற்குப் பரிகாரம் கிடையாது.

Accumulation of yarn and cloth

* 566 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether a large quantity of yarn and cloth have accumulated in the Textile mills in this State during October 1974; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். 2

(இ) இதற்கான காரணங்கள்:

வங்கிகள் பணம் வழங்குவதில் அனுசரித்த கட்டுப்பாட்டினாலும் வெளிச்சந்தையில் ஏற்பட்ட மந்த நிலைமையினாலும் ஆலைகளிலிருந்து வெளியே போகும் சரக்குகளின் அளவு குறைந்தது பணவீக்கத்தினாலும், வாங்கும் சக்தி குறைவினாலும் பொது

1975 ஏப்ரல் 7]

மக்களுக்கு துணியின் தேவை குறைந்தது. சாக்குகளின் தேக்கத்தினால் கைத்தறிகளுக்கும் விசைத்தறிகளுக்கும் நூல் தேவை குறைந்தது.

திரு. என். கே. பழனிசாமி : சார், போன வருஷம் 10 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சரக்குகள் மில்களில் தேக்கம் இருந்தது. மில் சொந்தக்காரர்கள், இது விலைவாசி வீழ்ச்சி என்று சொன்னார்கள், மத்திய அரசாங்கம், வீழ்ச்சி அல்ல என்று சொன்னார்கள். உண்மையாக, விலையை இறக்காமல் அதிகமான இலாபத்திற்கு உற்பத்தியாகும் துணிகளை விற்பதாலா அல்லது நூல் விலை அதிகமாகி கைத்தறி நெசவாளர்கள் நூலை எடுக்காமல் விட்டுவிட்டதால் அந்தத் தேக்கம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பொதுவாக நூல் விலையேற்றம் இந்தத் துறைக்குப் பெரிய பாதகமாக அமைந்தது என்பதுதான் உண்மை. அகில இந்திய அளவில் பரிசீலிக்கப்பட்டு, உற்பத்தி அளவிலும், விற்பனை அளவிலும் சீரான ஒரு திட்டமிட்டு, பொருளாதாரத் துறையிலும் இந்த விலைகளைக் கட்டுப்படுத்தினாலொழிய இதுபோன்ற தேக்கம் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படுவதை நாம் பார்க்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த உயர்ந்த ரக நூல்களுக்குத் தேக்கம் ஏற்பட்டது. மீடியம் சைஸ், 40 ஆம் நம்பருக்குக் கீழே உள்ள நூல்களை நம் ஆலைகளிலே நூற்பது இல்லாமல் இருப்பதால் இந்தத் தேக்கம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. மீடியம் கவுண்டில் எந்தவிதமான தேக்கமும் இல்லை என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, எந்தெந்த கவுண்ட் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் 40-க்குக் குறைவான நூலுக்கும் விலையேற்றம் ஏற்பட்டது உண்மை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, வெளிச்சந்தையில் மந்தம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ? அந்தக் காரணங்களைப் போக்குவதற்கு நமது அரசும், மத்திய அரசும் எடுத்த நடவடிக்கைகள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விலையேற்றம்தான் சரக்குகள் தேங்கியதற்கு ஒரு காரணம் என்று நான் குறிப்பிட்டேன். அகில இந்திய அளவிலே இந்த விலைவாசியை உற்பத்தி அளவிலேயும்,